Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

உங்கள் வியாபாரம்
சிறக்க ஈழநாதத்தில்
விளம்பரம்
செய்யுங்கள்.

ஈழநாதம்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065-2226110
065-2226303

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 19 04.09.2004 சனிக்கிழமை ஓசை 108

## சிறப்பு தளபதி ரமேஷ், கௌசல்யன் குழுவினர் வன்னி சென்றனர்

(நமது நிருபர்)

மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் தலைமையிலான விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவினர் நேற்றுக்காலை கிளிநொச்சி சென்றனர்.


**கண்காணிப்புக் குழுவின் வழிதுணையுடன் உலங்கு வானூர்தியில் பயணம்**

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் உலங்கு வானூர்தியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கொக்க ட்டிச்சோலை விளையாட்டு மைதானத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற னர்.

மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ், மட்டு அம்பாறை அரசியல்த் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், தளபதி ராம், தளபதி ஜெனார்த்தன், தளபதி ஜெயானந்தன் ஆகியோரே சென்றனர்.

இவர்களை ஏனையத் தளபதிகள், பொறுப்பாளர்கள் வழியனுப்பி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)




# மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால்

# தமிழ் மக்கள் எதிர்கொள்ளத் தயார்!

## தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டதாக சந்திரசேகரன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**சிறிலங்காவின் தேசியக் கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு யுத்தத்தைத் திணித்தால் அதனைச் சந்திக்க தமிழ் மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தயாராகவே உள்ளனர் இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திரசேகரன் தெரிவித்தார்.**



நேற்றுக் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது இத்தகவலைத் தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாக சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவித்த அவர், இந்தியாவின் ஆளும் மற்றும் எதிர்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## எலும்பு முறிவு சிகிச்சை விடுதி மட். வைத்தியசாலையில் திறப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சுகாதார அமைச்சினால் முப்பது லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எலும்பு முறிவு சிகிச்சை விடுதி சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்ப ட்டது.

நேற்று முன்தினம் வியாழ

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஓட்டமாவடியில் கிரனைட் வீச்சு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் நேற்று அதிகாலை கிரனைட் வீச்சு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்று வாழைச்சேனைப் பொலிசார் தெரிவிக்கின்றனர். நேற்றுஅதிகாலை 2 மணிக்கு இந்த கிரனைட் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடியில் அமைந்துள்ள

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## நோர்வே, கண்காணிப்புக் குழுவை வெளிறே சொல்வது சமாதானத்தை துரத்தும் செயல்

### அரியம் எம்.பி.கண்டனம்

(நமது நிருபர்)

நோர்வே தரப்பினரையும், கண்காணிப்புக் குழுவினரையும் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண அத்துரலியட்ண சீகதேரர் கூறியிருப்பது சமாதானத்தை நாட்டில் இருந்து துரத்தும் செயலாகவே கருத முடியும் என மட்டக்களப்பு மாவட்ட

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## நாளை தமிழின உயிர்க்கொலை நாள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுகோள்

(நமது நிருபர்)

தமிழ் இன உயிர்க் கொலை தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் பொது அமைப்புக்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்களைப் பூட்டி மற்றும் வாகனப் போக்குவரத்துக்களை நிறுத்தி உயிர்க்கொலை நாளை துக்க நாளாக அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிர்க்கொலை தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அம்பிளாந்துறைச் சந்தியில் படையினர் சோதனை தீவிரம்

(நமது நிருபர்)

அம்பிளாந்துறை சோதனைச் சாவடியில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக அதிகரித்திருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்களதும், படையினர் கட்டுப்பாட்டில் இருந்து வரும் பொது மக்களதும் அடையாள அட்டைகளை பரிசோதி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வைகோ மீதான வழக்கு விசாரணையை வாபஸ் பெற பூந்தமல்லி நீதிமன்றம் மறுப்பு

(நமது நிருபர்)

பொடாச் சட்டத்தின் கீழ் வை.கோ. மீது தாக்கல் செய்த வழக்கை விலக்கிக் கொள்ள முடியாது என பூந்தமல்லி உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

கடந்த 2002ம் ஆண்டு யூன் மாதம் மதுரை திருமங்கலம ருகே நடைபெற்ற கூட்டமொன்றில் வை.கோ. விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் ம.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த எட்டுப் பேரும் கைது செய்யப்பட்டனர்.

575 நாட்கள் சிறைவாசம் அனுபவித்ததன் பின்னர் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசுவது பயங்கரவாதக் குற்றமல்ல என பொடா மறுவாய்வுக் குழு தெரிவித்த பரிந்துரைக்கமைய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### இன்றைய நாளில்

**தகவல்துளி**

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகம் 04.09.1782 அன்று கப்டன் பியர் ஆன்றே து செவ்றேன் தலைமையிலான பிரெஞ்சுக்காரர்களால் 4 நாள் சண்டையின் பின்னர். பிரித்தானியரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. 1785ஆம் ஆண்டு வரைக்கும் பிரான்சியரின் கட்டுபாட்டில் துறைமுகம் இருந்தது.

# செய்தித் துளிகள்

## கண்காட்சி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட சிறுகைத் தொழில் நிலையம் நடாத்தும் மாபெரும் மலிவு விற்பனையும், கண்காட்சியும் எதிர்வரும் 10ம், 11ம், 12ம் திகதிகளில் மட்டக்களப்பு மிக்கல் தேசிய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழில் நிலையங்களும் பங்கு பற்றி தமது கைப்பணிகளை காட்சிக்கு வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிதி ஒதுக்கீடு

(பாண்டிருப்பு நிருபர்)

நாவிதன்வெளிப் பிரதேசத்தில் செயலகக் கட்டடம் அமைப்பதற்கு 30 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவினாலே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 4 வருடமாக சவளக்கடை கமநல சேவை மத்திய நிலையத்திலே இப் பிரதேச செயலகம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

## கட்டடம் நிர்மானிப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை ஆதார வைத்திய சாலைக்கு அவசர சிகிச்சைப் பரிவுக்கான கட்டடம் ஒன்றை நிம்மானிப்பதற்கு கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவினால் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் கே.முருகானந்தம் தெரிவித்தார்.

இதே வேளை வைத்தியசாலையின் ஒளி, ஒலி வசதிகளை ஏற்படுத்துவதற்காக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதன் 2 லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

## சட்ட விரோத மின் பாவனை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் சட்ட விரோத மின்பாவனை பெறுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உரிய முறையில் மின்சாரத்தினைப் பெறுவோர் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அண்மையில் இப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தினைப் பெற்று வந்த சிலர் மின்சார சபையினரால் கைது செய்தமையும் குறிப்பிடத்தக்கது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## உழவு வேலைகள் ஆரம்பம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் பெரும்போக நெற்செய்கைக்கான உழவு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருவமழை கண்டு விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உழவு இயந்திரங்கள் மற்றும் மாடுகளில் ஏர் பூட்டி தமது வயல்களில் உழவு வேலைகளில் இறங்கியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## குளங்கள் புனரமைப்பு

(நமது நிருபர்)


அம்பாறை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எட்டு சிறிய குளங்களை நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இப்புனரமைப்புக்கு ஐரோப்பிய யூனியன் 5கோடி ரூபாவை நியாப் திட்டத்தினூடாக வழங்கியுள்ளது. அதனால் 1200 ஏக்கர் வயல்காணிகள் இருபோக நெற்செய்கைக்குட்படுத்தப்படவுள்ளதோடு விவசாயிகள் பலர் நன்மையடையவுள்ளனர்.

# ஜனாதிபதி நாட்டில் இல்லாத போது பிரதமர் கல் நாட்டு விழா நடத்தினார்

(நமது நிருபர்)

**கட்டடத்திற்கான கல் நாட்டும் விழாவைப் பின்போடும் படியும், தான் நாடு திரும்பியதும் பெரிய விழாவாக இதை நடாத்தலாம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா லண்டனிலிருந்து எழுத்து மூலம் கேட்டுக் கொண்டிருந்தும் கூட, அந்த வேண்டுகோளைப் புறக்கணித்து, சுதந் திரக்கட்சியின் புதிய கட்டடத்துக்கான கல் நாட்டு விழாவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தலைமையில் நடாத்தியுள்ளார்.**



நேற்று முன்தினம் நள்ளிரவு ஸ்ரீலங்கா வருகை தந்து, இன்று இவ்விழாவில் சந்திரிகா கலந்து கொள்வார் என்று பலர் எதிர்பார்த்த போதும், லண்டனிலிருந்து பிரான்சிற்கு இரகசியப் பயணமொன்றை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.இந்நிலையில், இக்கட்டடக் கல்நாட்டு விழாவை, தான் கொழும்பு வரும் வரை பின் போடும்படி சந்திரிகா கேட்டுக் கொண்டிருந்த போதிலும், அதைப் புறக்கணித்து, ஜனாதிபதியின் பெயர்பொறித்த கல்லை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார்.சந்திரிகா கலந்துகொள்ளவில்லை என்பதால், லக்ஷ் மன் கதிர்காமர், மங்கள சமரவீர, அநுரா பண்டாரநாயக்க போன்ற முக்கிய அமைச்சர்கள் இவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. கட்டட த்திற்கான அத்திவாரக்கல்லைத் திறந்து வைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை உரை நிகழ்த்தும்படி பணித்தபோது, உரைநிகழ்த்த மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. இருப்பினும் இங்கு வரவேற்புரை நிகழ்த்திய கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி சந்திரிகாவின் வாழ்த்துக்களையும் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.ஆளும் ஐ.ம.சு.மு.க்குள்ளும், சுதந்திரக்கட்சிக்குள்ளும் கருத்துமோதல்கள் வலுத்து வருவதை இது சுட்டிக்காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.இதற்கிடையில், வருகிற செவ்வாய்க்கிழமையே ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பவுள்ளதாகவும், அவர் திரும்பியதும் பல முக்கிய திருப்பங்களை எதிர்பார்க்கலாம் என்றும் ஜனாதிபதி வட்டாரங்கள் கருத்துக் கூறியுள்ளன.

# நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுப் போயுள்ளது.

(நமது நிருபர்)

**-ஜெயராஜ் குற்றச்சாட்டு-**

ஆளும் ஐ.ம.சு.மு. கட்சிக்குள் உட்பூசல்கள் அதிகரித்துள்ளதை மேலும் உறுதிப்படுத்துவது போல், வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ள கருத்தில், தற்போதைய பொருளாதாரநிலை மிகவும் பின்னடைந்திருப்பதாகவும், இது தொடர்வதை அரசு அனுமதிக்கக் கூடாதெனவும் கடிந்து கொண்டுள்ளார். மிகவும் பயங்கரமான நிலையை நாட்டின் பொருளாதாரம் எட்டியுள்ளதாகவும், நாட்டின் அதிகாரிகளும் அமைச்சர்களும்கூட, தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். நாட்டின் ஆளும்கட்சி அமைச்சரொருவர் இவ்வாறு அரசைக் கடிந்திருப்பது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

# சந்தேக நபரைக் கைது செய்ய சென்ற பொலிசார் மீது தாக்குதல்

(நமது நிருபர்)

மொறட்டுவ, லுனாவப் பகுதியில் சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்யச் சென்ற பொலிஸாரை இனந்தெரியாத குழுவினர் இடைமறித்து பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். இதனால், இரு பொலிஸார் உட்பட எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். இதன் போது, பொலிஸ் வாகனங்கள் இரண்டும் சேதமடைந்தன. காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். கடந்த திங்கட்கிழமை இரவு நேரத்தில் லுனாவப் பகுதியில் மசகு எண்ணெய் உடலெங்கும் பூசிய நிலையில் உலாவிய ஒருவரை அப்பகுதி மக்கள் பிடித்துவைத்துக் கொண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அதையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் அவரைக் கைது செய்து, பொலிஸ் நிலையம் கொண்டு செல்ல முயன்றனர். அப்போது அங்குவந்த ஒரு குழுவினர் பொலிஸாரை மறித்து சந்தேகநபரை விடுவிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர். இதைத் தொடர்ந்தே குழப்பமும், மோதலும் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழப்ப நிலையைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# விடுதலைப்புலிகள் தங்களை நேரடியாக அழைத்துப் பேசலாம்.

**-ஜே.வி.பி.கூறுகின்றது-**

(நமது நிருபர்)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் அண்மையில் ஜே.வி.பி.க்கு விடுத்த வேண்டுகோளில், அவர்கள் விடுதலைப் புலிகளை நேரில் சந்தித்து தங்கள் கருத்துக்களை விவாதிக்க விரும்பினால், தான் அத்தகைய சூழ்நிலையை உருவாக்க முயற்சியெடுக்கத் தயாராயுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

பி.சந்திரசேகரன் அவர்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, பல தரப்பினரிடமிருந்தும் இந்த முயற்சியை ஜே.வி.பி. ஏற்றுக்கொண்டு தங்கள் கருத்து வேற்றுமைகளைச் சீராக்க முயற்சிக்க வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டது.இந்நிலையில், தங்கள் மேல் கொடுக்கப்படும் அழுத்தத்தைத் தணிக்கும் நோக்கோடு, விடுதலைப் புலிகள் தங்களை அழைக்க விரும்பினால் நேரடியாக அழைத்துப் பேசலாம் என்றும், இடையில் மத்தியஸ்தம் செய்ய யாரும் அவசியமில்லை என்றும் ஜே.வி.பி. பதில் கொடுத்துள்ளது

# தென்னிலங்கை மக்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பு விழிப்பூட்டல்

(நமது நிருபர்)

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான வரைவு என்பன பற்றி தென்னிலங்கை மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாட்டை தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தமாத நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கவுள்ளனர் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் தீர்வு முயற்சி குறித்து தெற்கு மக்களுக்கு விளக்கும் நடவடிக்கைக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

குழுவின் உறுப்பினரான சுரேஷ் பிரேமச் சந்திரனிடம் அவர்களது செயற்பாடுகள் பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கொழும்பு உட்பட தென்பகுதிகளில் உள்ள அனைத்துத் தரப்பினருடனும் தொடர்பு கொண்டும் தமது திட்டத்தை முன்னெடுக்க உள்ளர் என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் உரு வாக்க முயன்றுவரும் அமைப்புகள் மற்றும் மதகுருமார்களுடனும் தொடர்பு கொண்டு இந்தப் பிரசாரப் பணிக்கு அவர்களின் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் பெறப்படும். அத்துடன், புதிய இடதுசாரி முன்னணி, தொழிற்சங்க அமைப்புகள், ஊடகங்களின் ஆதரவையும் இந்த முயற்சிக்குப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமாதானத் துக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் பெறப்படும். எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்குப் பின்னர் இதுபற்றிக் கலந்துரையாடிய பின்னர் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுரேஷ் பிரமேச்சந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

# சைவப் புலவர் சங்கத்தின் பட்டமளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது

(நமது நிருபர்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினரின் 44 ஆவது பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்குவார்.

உண்மை விளக்கம் சித்தாந்த சாத்திரம் என்னும் நூல் வெளியீடும் இடம் பெறும். நூலின் வெளியீட்டுரையினை தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீன சமயப் பிரசாரகர் சைவப்புலவர் ஏ.அனு சாந்தன் நிகழ்த்துவார். நூலின் முதற்பிரதியை சைவ பரிபாலன சபைப் பொருளாளர் லயன் வ.தயாபரன் பெற்றுக் கொள்வார். சிறப்புப் பிரதிகளை சைவப்புலவர் மற்றும் பிரமுகர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

# கடந்தகால அரசு சிறுபான்மையினர் மீது காட்டிய பாரபட்சமே இளைஞர்கள் ஆயுதம் தூக்கநேரிட்டது

(பாண்டிருப்பு நிருபர்)

தமிழர் பிரதேசங்களில் நடந்த திட்டமிட்ட நிலஆக்கிரமிப்பும், குடியேற்றமும், அரசின் பாரபட்சமும்தான் தமிழ் இளைஞர் யுவதிகளை ஆயுதம் தூக்கி போராடுவதற்கு வித்திட்டது.

கடந்தயுத்த காலங்களில் இந்து ஆலயங்கள் பல அழிக்கப்பட்டது.ஆலயத்திற்குள் இருந்தவர்கள் கொல்லப்பட்டார்கள், தமிழர்கள் அகதிகள் ஆக்கப்பட்டார்கள். அன்று பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகத்திற்கு வழங்க வேண்டிய உரிமையும், மரியாதையும் கொடுத்திருந்தால் இத்தனை உயிர்களையும், சொத்துக்களையும் இழந்திருக் கமாட்டோம். இதற்கெல்லாம் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் அரசியல்வாதிகளே.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டு பேரவைத் தலைவர் கே.என்.தர்மலிங்கம் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட சகவாழ்வு மன்றம் இந்து மதகுருமார்களுக்கிடையில் நடாத்திய கருத்தரங்கு அண்மையில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் சகவாழ்வு மன்றத்தின் பெண்கள் இணைப்பாளர் திருமதி. கமலராணி சரவணன் தலைமையில் இடம் பெற்றது. அங்கு தமிழர் பேரவைத் தலைவர் தொடர்ந்து பேசுகையில்.

இந்துக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்களே தவிர யுத்தத்தை விரும்புகின்றார்கள் அல்ல. கடந்த காலத்தில் கூடுதலாக பாதிப்படைந்தவர்கள் தமிழர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.இன்றைய சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தமிழர்களாகத்தான் இருக்கின்றார்கள்

நிலமை இப்படி இருக்கும் போது வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்யப் போவதாகக் கூறி தென்னிலங்கையில் உள்ள சிங்கள அரசுகள் வெளி நாடுகளில் கோடி கோடியாக பணத்தை வாங்கி அங்குள்ள சிங்களக் கிராமங்களை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கின்றது. சிங்கள அரசியல் வாதிகளால் எமக்கு விடிவு ஏற்படப் போவதில்லை என்றார்.

# மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவாளர் தினவிழா

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்ட 82வது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா இன்று 04ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மட் கூட்டுறவு தேவநாயகம் கலையரங்கத்தில் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் ஆர். இராயப்பு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினர்களாக வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளரும் கூட்டுறவுசங்கங்களின் பதிவாளருமான ஐ. இளங்கோவன், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பந்து பாலரணவக்க, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் பி. இராஜரெட்ணம், மட்டக்களப்பு மாவட்ட வயலக்கல்விப் பணிப்பாளர் எம்.பவளகாந்தன், மக்கள் வங்கி பொது முகாமையாளர் வி. மனோகர் விஷேட அதிதிகளாக கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கணக்காய்வு வி.பேரின்பம், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பேச்சு, பாடல் மற்றும் வசந்தன், வடமோடி, தென்மோடி நட்டுக்கூத்துக்கள் சிறப்பு நாடகம், கோலாட்டம் பாரம்பரிய நடனம், சிறந்த சேவையைப் பூர்த்திசெய்த ஊழியர் கௌரவிப்பு, மாஸ்டர் சிவலிங்கம் அவர்களுக்கான, கலைஞர் கௌரவம் என்பன இடம் பெறவுள்ளன.

# இஸ்லாமிய மாணவர் ஏற்பாட்டில் பாராட்டு வைபவம்

(ஜெஸ்மி. எம். மூஸா)

இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்க மருதமுனைக் கிளையின் ஏற்பாட்டில் கலைத்துறையில் தோற்றிய அகில இலங்கை ரீதியில். முதல் நிலை பெற்ற எம்.ஏ. எம்.மூபீத், விஞ்ஞானத் துறையிலிருந்து மருத்துவ பீடத்துக்குத் தெரிவான எம்.இஸட்.எம். சப்றாஸ் ஆகிய இரு மாணவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் அண்மையில் அமைப்பின் மருதமுனைத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

மருதமுனை மாணவர் உறுப்பினர்கள் இவர்களைக் கௌரவிக்கும் இந் நிகழ்விற்கு தென் கிழக்குப் பல்கலைக் கழக மாணவன் எம்.ஏ.எம். அக்பர் தலைமை தாங்கினார். அக்கரைப்பற்று நீதிமன்ற நீதி பதி ரீ.எல்.ஏ.மனாப், கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்சார், அல்மனார் மத்திய கல்லூரி அதிபர் எஸ். எம்.ஏ.றஹீம், ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் ஏ.எச்.ஏ வதூத் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அமைப்பின் மருதமுனைத் தலைவர் றஹ்மத் துல் 'லாஹ், மாணவர் அமைப்பின் தலைவர் எம்.எம்.பௌஸ், மௌலவி என்.ஜீ.ஏ.கமால் ஆகியோர் நிகழ்வில் பாராட்டுரையாற்றினர் குறித்த மாணவர்களின் பெற்றோர்கள் உட்பட ஊர் பிரமுகர்கள், கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ஆயுர்வேத வைத்தியசாலையின் வருடாந்த பொதுக் கூட்டம்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மண்முனை வடக்குசித்த ஆயுள் வேத வைத்தி பாதுகாப்பு சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் மண்முனை வடக்கு பிரதேச செயலளார் கதிர்காமநாதன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச மட்டத்தில் இயங்கிவரும் மேற்படி சபையை விரிவுபடுத்த மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபை அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 2004,2005ம் ஆண்டுக்கான நிருவாகிகள் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவர் மூலிகை வேந்தர், கலைவாணன்,செயலாளர் எஸ்.சுதர்சன், பொருளாளர் திருமதி ம.தர்மலிங்கம், உபதலைவர்கள் என்.முகைதீன் பாவா, திருமதி சு. மனோகிதராஜா உப செயலாளர் எஸ்.சண்முகம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஐந்து பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மாணவர்குழு

# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம்

(ஜெஸ்மி எம். மூஸா)

தென்கிழக்குப் பல் கலைக் கழக தமிழ் விஷேட துறை இறுதியாண்டு மாணவர் குழுவொன்று இறுதி வருட ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அண்மையில் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்தது.

கிழக்குப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் செ.யோகராசா, நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு ஆகியோரைச் சந்தித்து தகவலைத் திரட்டிய இம் மாணவர் குழுவினர் பல்கலைக் கழக நூலகத்திற்கும் சென்றனர்.

# தென்கிழக்கு பல்கலைகழகத்தில் தகவல் மையம் அமைப்பதில் தாமதம்

(ஜெஸ்மி எம்.மூஸா)

அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய தகவல் மைய அமெரிக்கன் கோணர் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் விரிவுரையாளர், பல்கலைக் கழக மாணவர்கள், நிருவாகம் ஆகிய பகுதியினரிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் காரணமாக சகல வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

அண்மையில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற கருத்துப் பரிமாற்ற நிகழ்வில் சிரேஷ்ட மொழித்துறை விரிவுரையாளர் எம்.எஸ்.எம். ஜலால்தீன், தமிழ்த்துறை விரிவுரையாளர் றமீஸ் அப்துல்லா, அரசியல்துறை விரிவுரையாளர் எம்.எம்.பாஸில் நூலகர் றிபாவுடீன் உட்பட மாணவர்கள் பலரும் உரையாற்றினர்.

முஸ்லிங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கிலான நீண்டகாலத்திட்டமொன்றின் அடிப்படையில் இது பல்கலைக் கழகத்தில் நிறுவப்படலாம் என்ற கருத்துக்களின் அடிப்படையில் மீள் ஆலோசனையின் பின்னரே இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கூட்டம் நிறைவு பெற்றது.

# பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான தரிசன மாணவர்களுக்கு பாராட்டு வைபவம்

(எம்.யுவராஜ்)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப் படவுள்ள மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மாணவர்களைப் பாராட்டும் வைபவம் இன்று சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தரிசனம் பாடசாலை மண்டபத்தில் தரிசனத் தலைவர் அ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் எம். பவளகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக மட்- சிவானந்தா தேசிய் பாடசாலை அதிபர் ஈ.பி. ஆனந்தராஜா மட்- கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி ஐ. புஸ்பராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் பணிப்பாளருக்கு மகஜர்

(பாண்டிருப்பு நிருபர்)

அரச ஓய்வூதியம் பெறுபவர்களின் குறைபாடுகள், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்காக கல்முனைப் பிரதேச ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதியம் பெறுவோர்களிடமிருந்து அவர்களது கருத்துக்களை கேட்டு வருகின்றனர்.கல்முனைப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுவோர்கள் தங்களது கருத்துக்களை நேரிலோ,தபால் மூலமாகவோ இம் மாதம் 15ம் திகதிக்கு முன்பு பகிரங்க சேவை ஓய்வூதியங்களின் நம்பிக்கை நிதியம்,இல 29, தேசிய வீடமைப்புக் கட்டடம்,கல்முனை என்ற முக வரியுடன் தொடர்வு கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ரி. மகேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மையில் நோர்வேயில் நடைபெற்ற தமிழ்ச்சங்க மாநாட்டில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்த்தர் கா.வே.பாலகுமாரன் குத்து விளக்கேற்றுவதையும், அந்நிகழ்வில் இடம்பெற்ற மங்கையர்களின் நடன நிகழ்வையும். கா.வே.பாலகுமாரன் உரையாற்றுவதையும் படங்களில் முறையே காணலாம்.






## தாவரத்திலிருந்து டீசல்

இந்திய அறிவியல் கழக பேராசியர் சீனிவாசன், புங்கை மரத்திலிருந்து தாவர டீசல் பெற முடியும் என்று கண்டறிந்ததை அடுத்து புங்கை மரங்கள் மீது அனைவரின் கவனமும் திரும்பியுள்ளது.

நான்கு கிலோ புங்கன் விதையிலிருந்து ஒரு கிலோ எண்ணெய் பெற முடியும்.மூன்று கிலோ பிண்ணாக்கும் பெற முடியும். அதற்கு மொத்தம் ரூ 24 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பிண்ணாக்கு வருவாயை கழித்துக் கொண்டால் ஒரு கிலோ எண்ணெய்க்கு ரூ 10க்கும் சற்று அதிகம் தான் செலவு.

இதன் பிண்ணாக்கு நுண்ணுயிர் கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. நிலங்களுக்கு வளம் சேர்க்கும் வகையில் இது உதவும். பிற உரங்களை விட இது அதிபலன் அளிப்பதாகவும் இருக்கும்.

புங்கை மரத்தை தென்னை போல் பயிரிடும் போது ஹெக்டெயருக்கு நாலாயிரம் லாபம் கிடைக்க வழியுள்ளது. இது வரட்சியையும் தாங்கக்கூடியது.

தர்மபுரி, சேலம், வேலூர் மற்றும் திரவண்ணாமலை மாவட்டங்களில் புங்கை பயிரிடப்பட்டுள்ளன. தர்மபுரியில் மட்டும் 20 ல்ட்சம் மரங்கள் உள்ளன. இதை பயிரிடும் ஆண்டில் நான்கு மாதம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.


கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள புங்கை, மலைவாழ் மக்கள் வேலைவாய்ப்புக்கும் வருவாய்க்கும் வழிகளை ஏற்படுத்தி உள்ளது. மே.வங்கம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமங்கள் சில மின் தேவைக்குப் பதிலாக புங்கை எண்ணெய் மூலம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

கர்நாடகாவில் உள்ள தும்கூர் அருகில் ஏதவானி மற்றும் கொடவானி கிராமங்கள் இதற்கு முன் உதாரணமாகத் திகழ்கின்றது. ஓசூரில் சூத்ரா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தாவர டீசல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு மணிக்கு 50 கிலோ விதையிலிருந்து எண்ணெய் எடுக்க முடியும்.

தாவர டீசல் சுற்றுச் சூழலுக்கு உகந்ததாக இருந்தால், ஓசோன் படலம் பாதுகாக்கப்படுகின்றது. இதற்கு தேவையான மூலப் பொருட்கள் தாவரங்களில் இருந்து கிடைப்பதால் உற்பத்தியில் தொய்வு ஏற்பட வாய்ப்புக்கள் குறைவு. தாவர டீசல் இயந்திரங்களின் வாழ்நாட்களை அதிகரிக்க உதவுகிறது. இதனால் காட்டாமணக்கு மற்றும் புங்கை மரத்திலிருந்து டீசல் எடுக்கும் ஆய்வுகள் தீவிரமாகத் தொடர்ந்து வருகின்றன. தாவர எண்ணெய்யை பயன்படுத்துவதன் மூலம் 2010ல் 10 சதவீத டீசலை மிச்சப்படுத்த முடியும் என்று தற்போது கணக்கிடப்பட்டுள்ளது.

# மின்னேரிய தேசிய வனவிலங்கு சரணாலயம்

மின்னேரிய தேசிய வனவிலங்கு சரணாலயம் இலங்கையில் இயற்கையான



ஒரு காட்டுச் சூழலை அதிகமாகக் கொண்ட ஒரு பிரதேசம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள குளம் பல்வேறுபட்ட நீர்ப்பறவைகளுக்கு உறைவிடமாக இருக்கின்றது.

இதனுடைய விசாலமாக 20 கிலோ மீற்றர் வடமேற்கு எல்லையாக வடமேல் மாகாண சபைக்குட்பட்டது. கிழக்கு மேற்கு எல்லையாக கபறண, பொலனறுவை நெடுஞ்சாலை அமைந்துள்ளது. தெற்குஎல்லையாக மொறகஸ்வெவ சிகிரியாவாக உள்ளது. கொழும்பிலிருந்து நேரடியாகப் பயணம் செய்வதென்றால் 182 கிலோ மீற்றர் எடுக்கும்.

இந்த விலங்குகள் சரணாலயத்தின் நுழைவாயிலும் காரியாலயமும் அம்கஸ் வெவயில் அமைந்துள்ளது. இங்கு தான் வழிகாட்டியும், அனுமதிப் பத்திரமும் பெற்றுக் கொள்ளலாம். இதனுடைய மிகக் கிட்டிய நகரம் பொலனறுவை 24கிலோ மீற்றர் தூரம் நுழைவாயில் இருக்கின்றது. அநேகமாக மலை சார்ந்த பகுதியில் தலவாஸ், பத்தனால் ஆகிய புல்லினங்கள் செழிப்பாக வளரக்கூடிய பிர தேசமும் ஆகும்.

மின்னேரியா ஒரு புராதனகால நீர்ப்பாசனக்குளம் ஆகும். 22500 ஹெக்டெயர் விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கக் கூடியது. மழை நீரை விட மேலதிக நீரை அம்பன் கங்கை மூலம் பெற்றுக் கொள்கின்றது.


காலநிலை அதிகமாக உஷ்ண வலயப் பிரதேசமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் வருடாந்த மழைவீழ்ச்சியாக ஏறக் குறைய 1.146 மில்லிமீற்றர் ஆகும். அத்தோடு வருடாந்த வெப்பநிலையாக 27.5 பாகை சென்ரிகிரேற்

யூலை 29ல் மின்னேரியா, கிரித்தலை, இவைகள் 1938 ஒரு விலங்கு சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பின் 1970ம் ஆண்டளவில் உயிரியல் சம்மந்தமாக ஒரு தேசியக் கொள்கையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவ் வகையாக காலத்துக்குக் காலம் முன்னேற்றமடைந்த இச்சரணாலயம் இறுதியாக முக்கியமான ஒரு பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 1997ம் ஆண்டு தேசியப் பூங்காவாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

மின் னேரியாக் குளமானது 3ம் நூற்றாண்டில் மகாசேனன் என்னும் அரசனால் கட்டப்பட்டது. அத்தோடு ஒரு சிறிய கோயிலும் இதன் ஞாபகார்த்தமாக சரணாலயப் பகுதியில் கட்டப்பட்டது.

உஷ்ண வலயத்துக்குரிய தாவரங்கள் எப்போதும் இங்கு செழிப்பாகக் காணப்படும் அதிகமான சேனைப் பயிர்ச் செய்கையும் விவசாய நிலங்களையும் கொண்டுள்ளது. வானளாவ உயர்ந்த பெருத்த மரங்கள் பரவலாகக் காணப்படும். பாலை, வீரை, முதிரை, கருங்காலி, போன்ற பெறுமதி மிக்க மரங்கள் மிக அதிகமாக உண்டு. இலுக்கு, போகொன் போன்ற புற்கள் அடர்த்தியாக வளர்ந்து காணப்படும்.

24 வகையான முலையூட்டி விலங்குகள் இச்சரணாலயத்தில் உள்ளன. இதில் பிரதானமாக காட்டு யானைகளின் குடிப்பரம்பல் 150 தொடக்கம் 200 வரை இருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலாக புள்ளிமான், சிறுத்தைப்புலி, கரடி இவைகளும் மிகவும் அதிகளவாகக் காணப்படுகின்றன. 435வகையான பறவையினங்கள், புலியினங்கள் இச்சரணாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் 160 வகையான பறவையினங்களை இங்கு வெளிப்படையாகக் காணலாம். இங்கு காட்டுச்சேவல்களும் அதிகளவில் காணப்படுகின்றன. மின்னேரியாக் குளத்தில் 26 வகையானமீனினங்களும் அதிகளவான முதலைகளும் காணப்படுகின்றன.



# பறக்கும் தட்டுக்களின் விசித்திரம்

இன்றைய நவீன உலகிலே அறிவியலில் வளர்ச்சி மிகவும் வியக்கத்தக்கது. உலகம் படைக்கப்பட்டது முதல் இன்று வரையும் அறிவியில் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பிரமாண்டமானது. அறிவியல் கண்டு பிடிப்புகள் மூலமே இன்றைய நாகரீக மனிதனின் வாழ்வு வளமும் பெற்றிருக்கின்றது என்று சொல்லுமளவுக்கு அறிவியலின் ஆக்கிரமிப்பு மனித வாழ்க்கையோடு ஒன்றி விட்டது. உலகையும் மனிதனையும் அறிவியலும் அதன் படைப்புக்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால் அவ்வப்போது நிக்ழும் சில அதிசய சம்பவங்கள் உலகை வியப்பில் ஆழ்த்தி வருகின்றன. அவற்றில் ஒன்று தான் யூ.எப்.ஓ. எனும் இன்னும் அறியப்படாத பறக்கும் பொருள் யூ.எப்.ஓ. என்பது இப்படியும் இருக்கலாம், அப்படியும் இருக்கலாம் என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர். ஆராய்ச்சியாளர்கள் இது பற்றி ஆய்வு நடத்துபவர்களை யூபா லஜீஸ்ட்டுக்கள் என்று அழைக்கின்றனர். யூ.எப்.ஓ. என்பது இப்படித்தான் இருக்கும் என்று உறுதியாகக் கூற முடியாது. ஏனென்றால் இவற்றை ஒரு அறிவியல் சோதனைக் கூடத்தில் வைத்துச் சோதித்துப்பார்க்க முடியாது. இது பற்றிய எண்ணங்களையெல்லாம் கற்றறிந்து மேற்கொள்ளப்பட்ட யுகங்களேயாகும்.


யு.எப்.ஓ என்னும் அறியப்படாத பறக்கும் பொருள். யு.எப்.ஓ என்பது இப்படியும் இருக்கலாம், அப்படியும் இருக்கலாம் என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர் ஆராய்ச்சியாளர்கள். இது பற்றி ஆய்வு நடத்துபவர்களை யூபா லஜீஸ்ட்டுகள் என்று அழைக்கின்றனர். யு.எப்.ஓ என்பது இப்படித்தான் இருக்குமென்று உறுதியாகக் கூற முடியாது. ஏனென்றால் இவற்றை ஒரு அறிவியல் சோதனைக் கூடத்தில் வைத்துச் சோதித்துப் பார்க்கமுடியாது. இதைப்பற்றிய எண்ணங்களெல்லாம் கற்றறிந்து மேற்கொள்ளப்பட்ட யுகங்களே ஆகும்.

யு.எப்.ஓ என்பது ஒரு பொருளையோ அல்லது ஒளியையோ வாகனத்திலோ அல்லது நிலத்திலோ பார்க்கப்பட்டவுடன் தகவல் தெரிவிப்பதாகும். இதன் தோற்றம் ஒரு எரிபொருள் பாதை செயலாகவோ இயக்



கமாகவோ, ஒளியாகவோ அல்லது வண்ணமாகவோ இவை அனைத்தும் மற்றப் பொருட்களைப் போலவோ அல்லது இயற்கை விதிமுறைக் கூறுகளைக் கொண்டிருக்காது.

மேலும் இதைக் கண்ட காட்சிகள் மட்டுமல்ல இதைப் பற்றி அறிந்து ஒரு பொதுக் கருத்தை எட்டுவதற்காக ஆராய்ச்சி மேற்கொண்டு வரும் ஆராய்ச்சியாளர்களோ அல்லது தொழில் நுட்ப வல்லுனர்களோ இந்தச் சாட்சிகளை விசாரித்து அறிந்த பின் கூட அதனைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பது இதன் புதிரை மேலும் சிக்கலாக்குகின்றது.



யூ.எப்.ஓவை யார் யாரெல்லாம் காண முடியும் செல்வந்தரோ, ஏழையோ, படித்தவரோ, பாமரரோ, சிறியவரோ, முதியவரோ என அனைத்துத் தரப்பட்ட மக்களும் இந்த யூ.எப். ஓவைக் கண்டிருக்கிறார்கள். இதில் உண்மை என்னவென்றால் இதைப் பார்த்துத் தகவல் வழங்கும் மக்கள் இதனை உன்னிப்பாகக் கவனிப்பதில்லை என்பதே.

சிறு நகரங்கள் கிராமங்கள் அல்லது நகரத்தின் வெளிப்புறங்களிலே தான் இதைக் காணும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு. அதுவும் அதிகமாக நடு இரவில் தென்படுகின்றன. இருந்தாலும் நம்மில் பலர் கண்கூடாக இதைப் பார்த்ததே கிடையாது. நமது சக ஊழியர்களோ அல்லது நண்பர்களோ, சிறுவயதில் இதைப் பார்த்தது பற்றிக் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். யூ,எப்.ஓ பார்ப்பதற்கு எவ்வளவு சேகமாக நகர்கின்றது. இதன் படங்கள் இருக்கின்றனவா? யூ.எப்.ஓ எல்லா உருவங்களிலும் அளவுகளிலும் காணப்பட்டிருக்கின்றது. இவற்றில் சில. ஒளிப்பிளம்புகளாகவும் அவை இரவு நேரத்தில் ஆகாயத்தில் ஒரு வினோதமான உருவுடன் தோற்றமளிக்கும்.

## பத்து லட்சம் ரூபா நஷ்டஈடு கேட்டு ஜெயலட்சுமியின் தந்தை வழக்குத் தாக்கல்

(ராயட்டர்)

மனைவி, மகன் பேரக் குழந்தைகளை பொலிசார் கடத்திய வழக்கில் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்றும், தனக்கு பொலிசார் ரூ. 10 லட்சம் நஷ்டஈடு தர வேண்டும் எனக்கேட்டும் ஜெயலட்சுமியின் தந்தை அழகிரிசாமி மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்குத் தாக்கல் செய்தார்.



சிவகாசி காக்கிவாடன் பட்டியைச் சேர்ந்தவர் ஜெயலட்சுமி ஓய்வு பெற்ற ஆசிரியர் அழகிரிசாமியின் மகளான இவருடன் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பு வைத்திருந்து பல்வேறு காரியங்களைச் சாதித்துக்கொண்டுள்ளனர். ஜெயலட்சுமியும் அவர்களைப் பயன்படுத்தி பல்வேறு மோசடிகளைச் செய்திருப்பதாகக் கூறப்பட்டது. ஜெயலட்சுமி பொலிசாரால் கடத்தப்பட்டுக் கொன்று புதைத்துவிட்டதாகக் கூறப்பட்டது தமிழகத்தையே மிகவும் பரபரப்பாக்கி உள்ள ஜெயலட்சுமி சம்பந்தப்பட்ட இந்த வழக்கு மதுரை மேல் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

கடந்த மாதம் 3-ந் திகதி வந்த இந்த வழக்கு புதன்கிழமையன்று சட்டத்தரணிகள் விவாதத்துடன் முடிவடைந்தது. ஜெயலட்சுமி கொன்று புதைக்கப்பட்டதாக கூறப்பட்ட மனு மீதான வழக்கு விசாரணை முடிவடைந்து விட்டதால் அதன் மீதான தீர்ப்பை நீதிபதிகள் என். வி.பாலசுப்பிரமணியம், டி.வி. மாசி லாமணி ஆகியோர் திகதி குறிப்பிடாமல் புதன்கிழமை தள்ளி வைத்து உத்தரவிட்டனர்.

## மாவோ கிளர்ச்சியாளர்களின் தலைவர் நேபாள அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த மறுப்பு

(ராய்ட்டர்)

மாவோ கிளர்ச்சி யாளாகளின் தலைவர் நேபாள பிரதமர் சோபகதூர் தியுபாவினுடைய கூட்டணி அரசுடன் சமாதானப் பேச்சுவாத்தையை நடத்த முடியாது எனக் கூறியுள்ளார்.

நேபாள மன்னர் ஞாநேந்திராவுடன் நேரடியாகப் பேசவே தாங்கள் விரும்பியுள்ளதாக கிளர்ச்சித் தலைவர் பிரசாத் கூறியுள்ளார் நம்பத் தகுந்த சர்வதேச மத்தியஸ்துடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியமாகும் எனக் கூறியுள்ளார். பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கக் கூடும் என்று முன்னாள் அமைச்சர்கள் கூறியதையடுத்து பிரசாத் இவ்வாறு கூறியுள்ளார். பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கக் கூடும் என்று முன்னாள் அமைச்சர்கள் கூறியதையடுத்து பிரசாத் இவ்வாறு கூறியுள்ளார்.


நேபாளத்தில் மன்னர் ஆட்சி நிறைவு நீக்கி, கம்யூனிசக் குடியரசு நிறுவ கடந்த 9 ஆண்டுகளாக வன்முறை மிக்க வகையில் மாவோ கிளர்ச்சியாளர்கள் போராடி வருகின்றார்கள். இதுவரையில் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க கடற்படை அதிகாரி குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்

(ராய்ட்டர்)

கடந்த ஆண்டு ஈரான் மேக்ஸ்சிப்ட் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் மீது நடத்தப்பட்ட சித்திரவதை கொடுமைகள் சம்மந்தமாக கைது செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்ட ஒரு கடற்படை வீரர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றார். தனது கடமையிலிருந்து தவறிவிட்டமை கைதிகள் துஷ்பிரயோகம் ஆகிய இரு குற்றங்களும் நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே இவரால் மேற்படி சாட்சியளித்ததினால் 52 வயதுடைய ஈராக்கிய குடிமகன் ஒரு சில நாட்களின் பின் மரணமடைந்தார்.

குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ள க்கிறை பிற்மன் ஒரு கடற்படை மேஜர் பதவி நிலையில் இருந்தவர். இராணுவ நீதிமன்றில் தோன்றிய போது காக்கி மற்றும் பச்சை நிறத்தினாலான கோல உடையணிந்து சேவைக்கான சிவப்புப் பட்டிகளையும் வைத்திருந்தார். எந்தவிதமான பிரதிபலிப்பும் காட்டாமல் இருந்தார். இவருக்கு வயது 40 நியூகோர்க் தலைநகரில் ஒரு சிறைக்கூடத்தில் காவலராக வேலை செய்தவர் நெக்கீம் கெற்ரர் என்னும் ஈராக்கியரை கராட்டி மற்றும் அடித்து உதைத்து துன்புறுத்திக் கொண்டவர். சென்ற வெள்ளிக்கிழமையன்று இராணுவ நீதிமன்றத்தில் இவர் நிறுத்தப்பட்டு நடுவர் அவர்களால் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. இதற்கு முன்பதாக பிட்ற்மன்னுடைய மனைவியும் கூடவேயிருந்தனர். பெற்மன் தனது



மனைவியை ஆரத் தழுவிக் கொண்டார். இவருக்கு காவலாக ஒரு இராணுவ மேஜர் நியமிக்கப்பட்டிருந்தார். எனவே 9 மாதங்கள் பிற்மண் சிறைவாசம் அனுபவித்திருந்தார். இவருக்கெதிராக மூன்று கண்காட்சிகள் விசாரிக்கப்பட்ட போது பிற்மன் கைதிகளை அடித்து உதைத்ததைக் கண்டதாகவும் இதில் ஒரு உள்ளூர் முஸ்லிம் பெரியாரும் அடங்குவார் என வாய்மூல அறிக்கை கொடுத்தனர். இவருக்காக வாதாடிய சட்டத்தரணி மேஜர் லிலோண் பிரான்சீஸ் இவர் மேல் வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் அரை வாசி பொய் அரைவாசி தான் உண்மை என்றும் அடிப்படை ஆதாரம் ஒன்றும் கிடையாதென்றும் கூறினார்.

## தென் கொரியத் தலைநகரில் நூதனப் போராட்டம்

(ராய்ட்டர்)

உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தென்கொரிய தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் நூதனப் போராட்டம் நடத்தப்பட்டது.

விஷவாயு, இரசாயன கழிவு, பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட குப்பை கூளங்களால் பூமி உருண்டை நாளுக்கு நாள் மாசடைந்து கொண்டே வருகிறது.

இதுகுறித்து உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தென்கொரிய தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் நூதனப் போராட்டம் நடத்தப்பட்டது. பூமி உருண்டை வேடமணிந்த ஒருவர் நடுவே அமர்ந்திருக்க அவர் மீது ஏராளமானோர் குப்பைகளை வீசி எறிந்தனர். இந்நிலை நீடித்தால் பூமியில் மனிதன் வாழவே முடியாத சூழ்நிலை உருவாகிவிடும் எனப் போராட்டக் குழுவினர் எச்சரிக்கை விடுத்தனர்.



# ரஷ்யப் பாடசாலையை தீவிரவாதிகள் முற்றுகை தப்பி வந்த மாணவன் சம்பவம் பற்றி விபரிப்பு

(ராய்ட்டர்)

தீவிரவாதிகள் 350 குழந்தைகளை சிறைபிடித்த பள்ளியில் துப்பாக்கிக் கையெறி குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. குழந்தைகளைச் சுற்றி பெண்கள் உட்பட 40 தீவிரவாதிகள் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். குழந்தைகள் உயிர் தப்புவார்களா, என்ற கேள்வி எழுந்துள்ளது.

ரஷ்யாவில் தெற்கு பகுதியில் பெஸ் லான் என்ற இடத்தில் உள்ள பள்ளியில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் புகுந்து அங்கிருந்த குழந்தைகளை துப்பாக்கி முனையில் சிறை பிடித்தார்கள் தீவிரவாதிகள் பள்ளியில் நுழையும் முன் அங்கு பெற்றோர் தினவிழா நடந்தது. இதனால் அங்கு சில பெற்றோர்களும் சிக்கிக் கொண்டனர். தற்போது தீவிரவா திகள் பிடியில் குழந்தைகளும், பெற்றோர்களுமாக 350 பேர் சிக்கியுள்ளனர்.

இந்த தீவிரவாதிகள் ரஷ்யாவில் இருந்து பிரிந்துச் சென்ற செசன்யா நாட்டைச் சேர்ந்தவர்கள். செசன்யாவில் தங்களுக்கு தனி நாடு கேட்டுப் போராடி வருகிறார்கள். செசன்யாவில் உள்ள இந்தத் தீவிரவாதிகளை ஒழிக்க அங்கு ரஷ்ய இராணுவத்தை அனுப்பி போர் நடத்தி வருகிறது.

செசன்யாவில் இருந்து ரஷ்ய இராணுவம் வெளியேற வேண்டும். ரஷ்ய இராணுவம் சிறை பிடித்த தீவிரவாதிகளை விடுதலை செய்யவேண்டும் என்பதுதான் தீவிரவாதிகளின் கோரிக்கை.



தற்போது அந்த பள்ளியை ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் சூழ்ந்து நிற்கின்றார்கள். பள்ளிக்குள் பயங்கர ஆயுதங்களுடன் தீவிரவாதிகள் பள்ளிக் குழந்தைகளையும், பெற்றோர்களையும் தங்கள் பிடியில் வைத்து உள்ளனர். மொத்தம் 40 தீவிரவாதிகள் இருக்கி ன்றார்கள். தீவிரவாதிகளில் பெண்களும் உள்ளனர். அவர்கள் உடல் முழுவதும் வெடிகுண்டை சுற்றிக் கொண்டு குழந்தைகளைச் சுற்றி நிற்கிறார்கள். குழந்தைகளுக்கு தண்ணீர், உணவு கொண்டு செல்ல தீவிரவாதிகள் அனுமதிக்கவில்லை. பள்ளிக்குள் இராணுவம் நுழைந்தால் வெடிகுண்டு வைத்து பள்ளியைத் தகர்த்து அனைத்து குழந்தைகளையும் கொன்றுவிடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர். தீவிரவாதிகள் பள்ளிக்குள் நுழையும் போது பாதுகாப்பு படையினருக்கும், அவர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் 10 பேர் கொல்லப்பட்டனர். பலியான ஒவ்வொரு தீவிரவாதிக்கும் பதிலாக 50 குழந்தைகளைக் கொல்வோம் காயமடைந்த ஒவ்வொரு தீவிரவாதிக்கும் பதிலாக 20 குழந்தைகளைக் கொல்வோம் என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர்.

## ஈராக்கில் விடுதலையான மூன்று இந்தியர்களுக்கு டெல்லியில் வரவேற்பு

(ராய்ட்டர்)

ஈராக்கில் விடுதலை செய்யப்பட்ட 3 இந்தியர்களுக்கு டெல்லியில் நேற்று ஹீரோ வரவேற்பு அளிக்கப்படுகிறது. மத்திய அமைச்சர் விமான நிலையத்துக்கு நேரில் சென்று வரவேற்றனர்.

இந்தியாவைச் சேர்ந்த அந்தரியாமி, திலக்ராஜ், சுக்தேவ் சிங் ஆகியோர் குவைத்தின் கே.ஜி. எல். நிறுவனத்துக்காக ஈராக்கில் பணியாற்றியபோது தீவிரவாதிகளால் கடத்தி பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

# உலக செய்திகள்

## சேது சமுத்திரத் திட்டத்திற்கு இருநூறு கோடி மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்

(ராய்ட்டர்)

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் டெல்லியில் நடந்தது. இதில் சேது சமுத்திர திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது.



அதன்பிறகு பேட்டி அளித்த மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியதாவது:-

மன்னார் வளைகுடாவில் இருந்து பாக்ஜலசந்தி வழியாக வங்கக் கடலுக்குக் கப்பல்கள் செல்லும் பாதை ஏற்படுத்துவதற்கான சேது சமுத்திரத் திட்டம் ரூ200 கோடி செலவில் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்அளித்துவிட்டது.

இந்த திட்டத்தைச் செயல்படுத்த சேது சமுத்திரம் கார்ப்பரெசூன் (கழகம்) லிமிடெட் என்ற சிறப்பு நோக்க அமைப்பு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும். இந்தக் கழகத்தில் இந்தியக் கப்பல் போக்குவரத்து கழகம், தூத்துக்குடி துறைமுகக் கழகம் உள்பட மற்றவற்றின் சம அளவுள்ள பங்குகள் இருக்கும் ஒன்றுக்கு 1.5 என்ற விகிதத்தில் கடன் பங்குகளுடன் ரூ.800 கோடி அதிகாரப் பூர்வ மூலதனமாக இருக்கும்.

இந்திய கப்பல் போக்குவரத்து கழகமும், தூத்துக்குடி துறைமுகக் கழகமும் தங்கள் பங்காக தலா ரூ.50 கோடி வழங்கும் டி.சி.ஐ., சென்னை துறைமுகக் கழகம், எண்ணூர் துறைமுகக் கழகம், விசாகப்பட்டினம் துறைமுகக் கழகம், பாரதீப் துறைமுகக் கழகம் ஆகியவை தங்கள் பங்காக தலா ரூ.30 கோடி வழங்கும் மீதி பங்குத் தொகையை மத்திய அரசும் மற்ற நிறுவனங்களும் கொடுக்கும் என்றார்.

# விளையாட்டு வீரர்களுக்குஉடல் தகுதி மட்டுமல்ல உளத் தகுதியும் தேவை

## -விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா-

''விளையாட்டு வீரர்களுக்கு உடல் தகுதி மட்டும் போதுமானது அல்ல. மாறாக உளத் தகுதியும் அவசியமாகும். அப்போதுதான் விளையாட்டில் சிறந்த அடைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்." இவ்வாறு கல்முனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மின்னல் விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் நிகழ்வில் உரையாற்றிய விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது: ''விளையாட்டுத்துறை வளர்ச்சியில் எமது பிரதேசம் பங்களிப்புச் செய்த போதிலும் இங்கு போதுமான வளங்களும் நியமங்களும் விளையாட்டுக்கென இல்லை. போதிய வசதி படைத்த மைதானங்கள் கூட கிடையாது. இவ்விடயத்தில் நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றோம்" என்றும் குறிப்பிட்டார்.

மின்னல் கழகம் நடாத்திய கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கல்முனை விக்டோரியஸ் கழகம் சம்பியனானது. கழகத்தலைவர் எஸ். எச்.எம்.சமீம் தலைமையில் இடம் பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாக கல்முனை நகர சபை ஆணையாளர் ஏ.பி.எம்.சலீம் கலந்து கொண்டார்.

மின்னல் கழகம் நடாத்திய கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கல்முனை விக்டோரியஸ் கழகம் காரதீவு விவேகானந்தா கழகத்தை தோற்கடித்து சம்பியனாகியது.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் வெற்றி

நியூயார்க் ஆக 3 ஆண்டின் கடைசி கிராண்ட் சிலாம் பட்டத்துக்கான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்றார்.



ஆண்டின் கடைசி கிராண்ட் சிலாம் பட்டத்துக்கான அமெரிக்க ஓபன் டென்னிஸ் பந்தயம் நியூயார்க் நகரில் விறு விறுப்பாக நடந்து வருகின்றது. சம்பியன் வாய்ப்பை அதிகப்படு த்திய முன்னணி ஆட்டக்காரர்கள் சிலர் தொடக்க த்திலேயே தோல்வி கண்டு வெளியேறினர். முன்னாள் சிறந்த வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் எந்தவித போராட்டமும் இன்றி தனது ஆட்டத்தில் வெற்றி பெற்றார். லின்ட்சே லீ வாட்டர்ஸ் என்பவரை எதிர்த்து மோதிய செரீனா 6-4, 6-3 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று 3வது சுற்றுக்குத் தகுதி பெற்றார். ஆண்கள் இரட்டையர் போட்டியில் மகேஷ் பூபதி-மேக்ஸ்மிர்னி ஜோடி 2வது சுற்றுக்கு முன்னேறி உள்ளது குறிப்பிடத்தக்கது.




## கல்முனை விக்டோரியஸ் கழக ஆண்டு விழா

கல்முனை விக்டோரியஸ் விளையாட்டுக்கழகத்தின் 23 வது வருட பொதுக் கூட்டம் கடந்த வாரம் கல்முனை நகர மண்டபத்தில் டப்ளியூ.ஜெஸ்மின் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கழகத்தின் மூத்த உறுப்பினர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா தலைமையில் புதிய ஆண்டுக்கான நிருவாகிகள் தெரிவு இடம் பெற்ற போது அதில் ஆலோசகர் எம்.ஐ.எம்.முஸ்தபா,சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம்மனாப், தலைவர் ஏ.எம்.றியாஸ்,செயலாளர் யாயாகி அறபாத், பொருளாளர் எல்.ஏ.காதர், உபதலைவர்கள் சகாய மரியான், பி.எம்.ஏ.கலீல், ராஜா பிரியந்த பயிற்றுவிப்பாளர், யூ.எல்.எம். ஹிலால், முகாமையாளர் எம். எஸ்.எம்.பளீல், கிரிக்கெட் தலைவர் டப்ளியூ.ஜெஸ்மின், மெய்வல்லுனர் தலைவர் எஸ்.எம்.ஹமீஸ், ஊடகப் பொறுப்பாளர் யூ.சம்சுதீன், நிருவாகக்குழு யூ.எல்.எம்.செயின், எஸ்.சுந்தர்,கலில்,ரகுமான், எம்.ஏ. லத்தீப் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## இங்கிலாந்து சகலதுறை வீரர்அன்ரோவுக்கு கடுமையான காயங்கள் இல்லை

இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான இரண்டாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நேற்று நடைபெற்றது.

புதன் கிழமை நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் உபாதைக்கு உள்ளானதையடுத்து மைதானத்திலிருந்து இடைநடுவில் வெளியேறிய இங்கிலாந்து சகல துறை வீரர் அன்ரோ பீற்றோப்பிற்கு கடுமையான காயங்கள் எதுவுமில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே பீற்றோப் எக்ஸ்ரே சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக இங்கிலாந்து அணியின் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

## உலக டெனிஸ் தரப்படுத்தலில் அன்ரூ அக்காஸிக்கு வெற்றி

உலக டெனிஸ் தரப்படுத்தலில் 6ம் இடத்திலுள்ள அன்ரூ அக்காஸி அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டிகளில் மூன்றாம் சுற்றிற்குத் தகுதி பெற்றுள்ளார்.

இம்முறை அமெரிக்க டெனிஸ் சம்பியன் பட்டத்தை வென்ற . அன்ரூ அக்காஸி,ஜேர்மன் வீரரான வுளோறியனை 7-5,2-6, 6-2 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றுள்ளார்.

இதே வேளை பிரான்ஸ் பகிரங்க சம்பியனை கலோடியே சுவிடன் தோமஸ் ஜெயரஞ்சினியிடம் விஸ்ரன் 6-3, 2-6, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் தோல்வியடைந்துள்ளார்.

# எங்கள் குரல்

## ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனம் எடுக்கவும்

ஈழநாதம் எங்கள் குரல் பகுதி வாயிலாக இரண்டு தடவை சுட்டிக்காட்டியதன் பலனாக கதிரவன் விளையாட்டுக் கழகத்திற்கு 25 வீத நன்மை கிடைத்துள்ளது.

எங்கள் குரல் பகுதியின் ஊடாக கதிரவன் விளையாட்டுக் கழகத்தின் குறை தீருமா? எனக் கேட்டுப் பிரசுரித்ததற்கமைய மட்டக்களப்பு மாவட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் 50.000 ரூபாய் பணத்தைத் தந்துவியமைக்கு கழகத்தின் சார்பில் கதிரவன் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினரும், உறுப்பினர்களும் தமது நன்றியினைத் தெரிவிக்கின்றனர்.இதனைப் போன்று ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் விளையாட்டு உத்தியோகத்தர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு ஏனைய 75 வீதத் தேவைகளை நிவர்த்தி செய்து கதிரவனுக்குப் புத்துணர்ச்சி கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

துறையூரான்

## வீதி திருத்தப்படுமா?

மண்டபத்தடி கிராமத்தினூடாக சென்று கரையாக்கந்தீவு வரை செல்லும் வீதியானது குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது. இந்தப் பாதையூடாக பயணம் செய்யும் பயணிகள் பல கஸ்ரங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த வீதியானது மண்டபத்தடி, கரையாக்கந்தீவு மக்களின் பிரதான வீதியாகும். இந்த வீதி புனரமைக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலேயே குன்றும், குழியுமாகவே இருக்கின்றது. இதில் கனரக வாகனங்கள் பயணம் செய்ய முடியாது இருப்பதுடன் வீதி விபத்தும் ஏற்படுகின்றது. அத்துடன் பாடசாலைக்குத் தினமும் செல்லும் மாணவர்களும் இதனால் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

இந்த வீதி சம்பவமாக பல அதிகாரிகளுக்கும் தெரிவித்தும் எதுவிதப் பயனும் கிடைக்கவில்லை என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குக் கேட்டு வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குச் சென்றதும் தாங்கள் வாக்குக் கேட்டு வந்த மக்களையும், அந்த ஊரையும் மறந்தே விடுவார்கள். எமது மக்களின் இத்தகைய பிரச்சினை பற்றி எதுவித அக்கறையுமின்றி இருப்பது எமக்கு மிகவும் மனவேதனை தரும் விடயமாகும்.

எனவே தயவு செய்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ எமது இந்த பிரதான வீதியை பார்வையிட்டு அதனைத் திருத்துமாறு ஈழநாதம் எங்கள் குரலினூடாகக் கோரிக்கை விடுக்கின்றோம்.

எல்.கலையன்.

## படுவான்கரை பிரதேச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் போக்குவரத்துப் பிரச்சினை தீருமா?

மண்முனை மேற்கு பிரதேச பாடசாலைகளுக்கு நகர்ப்பகுதிகளிலிருந்து கற்பிக்க வரும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை போக்குவரத்துப் பிரச்சினையாகும். இதிலும் குறிப்பாக குறிஞ்சாமுனை, கன்னன்குடா,புது மண்டபத்தடி, மண்டபத்தடி,கரையாக்கந்தீவு, காயான்மடு, கொத்தியாபுலை, காஞ்சிரங்குடா ஆகிய பாடசாலைகளுக்கு கற்பிக்க வரும் ஆசிரியர்களே இவ்வாறான போக்குவரத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேற்படி குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு கற்பிக்க வரும் ஆசிரியர்கள் மட்டக்களப்பு நகரிலிருந்து வருபவர்கள் அல்ல. அதாவது அனேகமானவர்கள் கல்லடி, நாவற்குடா, ஆரையம்பதி போன்ற இடங்களிலிருந்தே தமது தொழில் நிமிர்த்தம் வருகின்றனர். இதில் முக்கிய பிரச்சினை போக்குவரத்தாகும். அதாவது இப்பகுதியிலிருந்து வரும் ஆசிரியர்கள் தங்களது இடத்திலிருந்து அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்டு மட்டக்களப்பு பஸ் தரிப்பிடத்தை அடைந்து 6.30 மணிக்குப் புறப்படும் மணல்பிட்டி நோக்கிவரும் பஸ்ஸிலேயே வரவேண்டும். இவர்கள் குறிப்பாக 6.30 வரும் இந்த பஸ்ஸைத் தவற விட்டால் அன்றைய நாள் அவர்கள் விடுப்பு எடுக்கும் ஒரு நிலை ஏற்படுவதுடன் மாணவர்களுக்கான கல்வியும் அன்றைய நாளில் கிடைக்காமல் போகின்றது. இதனால் பாதிக்கப்படுவது யார்? இப்பகுதி மாணவர்களே அதாவது கல்வியில் பின்தங்கிய நிலையிலுள்ள படுவான்கரை மாணவர்களே என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த ஆசிரியர்கள் காலையில் குறித்த நேரத்திற்கு பாடசாலைக்குச் சென்றாலும் பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலை விட்டால் தமது வீட்டுக்குச் செல்ல எதுவித வாகனமும் இன்றி பல கஸ்ரங்களுக்கு மத்தியில் தமது வீடுகளுக்கு நான்கு அல்லது ஐந்து மணிக்கே வீட்டுக்குச் செல்வதாக கவலை அடைகின்றனர். இந்த நிலையில் குடும்பப் பொறுப்புடைய பெண் ஆசிரியர்கள் 4 அல்லது 5 மணிக்குச் சென்று தமது ஏனைய வேலைகளை செய்ய முடியாது திண்டாடுவதாகவும் கூறுகின்றனர்.

இவ்வாறு பல கஸ்ரங்களுக்கு முகம் கொடுக்கும் ஆசிரியர்கள் இரண்டாம் தவணை பாடசாலை விடுப்பிற்கு முன்பு நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனியினரின் அனுமதியுடன் இன்னுமொரு பஸ்ஸினை தமது சேவையில் ஈடுசெய்யும்படி கோரி பாராளுமன்ற உறுப்பினர்கள், பஸ் கம்பனி போன்றவர்களிடம் அனுமதி முகாமையாளர்கள். கேட்டிருந்தனர்.

ஆனால் நடந்தது என்ன? மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் இயங்கத் தொடங்கி விட்டது. ஆனால் தற்போது வரைக்கும் மணல்பிட்டி பஸ் மாத்திரமே சேவையில் உள்ளதாக ஆசிரியர்கள் அங்கலாய்க்கின்றனர். அதிகாரிகளே, ஆசிரியர்களே ஏன்? இந்த பாராமுகம் நாங்கள் விடுக்கும் கோரிக்கைகள் உங்களுக்கு ஏளனமாகவா? தெரிகின்றது. எங்கள் நிலையில் நீங்கள் இருந்தாலும் இதே பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதை மிகவும் மனவேதனையுடன் ஈழநாதம் பத்திரிகைக்கு இவ்வாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். எனவே பாராளுமன்ற உறுப்பினர்களே, இப்பகுதியில் நிர்வாகத்தை கொண்டு நடத்துபவர்களே கல்விப் பொறுப்பாளரே தயவு செய்து இவ் ஆசிரியர்களின் முக்கிய பிரச்சினையான போக்குவரத்துப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுத்து, எமது பகுதி மாணவர்கள் கல்வியில் முன்நிற்க கவனமெடுக்க வேண்டுமென மிகவும் வினையமாகக் கேட்கப்படுகின்றீர்கள்.

சுழியோடி

**அன்புடன் வாசகர் நெஞ்சங்களுக்கு!**

உங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தியில் பாராபட்சமா புறக்கணிப்பா, ஊழல் மோசடி களை ஈழநாதம் எங்கள் குரலு க்கு தகுந்த ஆதாரங்களுடன் அனுப்பிவையுங்கள் நிச்சயம் பிரசுரிப்போம்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**எங்கள் குரல்**
**ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை.**



## சிந்தனை

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவழிகளை சந்திக்கின்றது; பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது; கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை
தொலைபேசி : 065-2226110,
065-2226303
batti @ eezhanatham .com
04.09.2004

# நோர்வேயை ஒதுக்க நினைக்கும் சிறிலங்கா

இலங்கை விவகாரத்தில் இந்தியாவை உள்ளிளுக்க ஆளும் தரப்பு சில மறைமுக நடவடிக்கைகளைக் கையாண்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்தும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்தும் சமாதானத்திற்கு எதிராகக் கோசம் எழுப்பி வரும் சக்திகள் இவற்றின் செயற்பாடுகளைக் கண்டித்து வருகின்றன.

அண்மைக் காலமாக இக்கண்டனக் குரல் அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவை உள்ளிளுக்கும் ஒரு முயற்சியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் மற்றும் சில அமைச்சர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்தியாவுக்குமிடையிலான உறவு விரிசலடைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை இந்தியா கொண்டிருப்பதால் இனப்பிரச்சினை விவகாரத்தில் உள்ளிளுக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகளுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ இந்தியா சார்ந்து நில்லாது என்றும், அதனால் சிங்கள மக்களுக்கே நன்மை பயக்கும் என்றும் ஆளும் தரப்புக் கருதுகின்றது. இதனடிப்படையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்கான இந்தியத் தூதுவரை சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்களும், ஆளும் தரப்பில் கூட்டு வகிக்கும் ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற கட்சிகளும் இந்தியா தமிழ் மக்கள் விவகாரத்தில் தலையிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளன.

எனவே தெற்காசியாவில் வல்லரசாகத் திகழும் இந்தியாவை மீண்டும் தலையிட வைப்பதன் மூலம் சமாதானத்திலோ அல்லது சண்டையிலோ பாரதம் ஆதரவு வழங்கும் என ஆளும் தரப்பு கருதுகின்றது.

ஆனால் இந்தியா 1987ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய, இலங்கை உடன்படிக்கை பின்னர் அமைதிப்படையென தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்த இந்தியப் பட்டாளம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் தேசியத் தலைவரின் தூரநோக்கான சிந்தனையினால் முறியடிக்கப்பட்டது.

இந்திய இராணுவம் தமது இலக்கை அடையமுடியாமல் பெரும் உயிரிழப்பைச் சந்தித்து மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேற நேரிட்டது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்தியா மீண்டும் மூக்கை நுளைக்க விரும்பாது என எண்ணத் தோன்றுகின்றது. அதே சமயம் இந்தியா ஈழத்தமிழர் விவகாரத்தில் பாராமுகமாக இராது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அந்த ஒத்துழைப்பு சிங்கள வல்லாதிக்க சக்திகள் எதிர்பார்ப்பது போன்று இருக்கக்கூடாது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையில் போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்படுத்தி அமைதிச் சூழலைத் தக்க வைப்பதற்கு அரும்பாடுபடும் நோர்வேயின் அனுசரணைப் பணியினை சிங்களத் தரப்பு நிராகரிப்பதற்குக் காரணம் சிறிலங்கா அரச தரப்பு, மற்றும் பேரினவாத சக்திகளின் சுயரூபத்தை நோர்வே அடையாளம் கண்டு கொண்டதுதான்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை விடயத்தை இழுத்தடித்து வரும் சிறிலங்கா ஆளும் தரப்பு மீது சமாதானத்தின் அவசியம் பற்றி நோர்வே தரப்பு கொடுத்த அழுத்தமும் நோர்வேயின் அனுசரணைப் பணியை ஒதுக்கித் தள்ளுவதற்கு காரணமாகும். எனவே தடைப்பட்டு நிற்கும் சமாதானப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு நோர்வேயின் அனுசரணை அவசியமானது.

# நாடு பூராகவும் 26 இளைஞர் தகவல் தொழிநுட்ப நிலையங்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடு பூராக 26 இளைஞர் தகவல் நிலையங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தகவல் நிலையங்கள் அமைக்கப்படுமென்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் நாயகமும், தலைவரு மான நீல் பண்டார ஹப்புஹினி அறிவித்துள்ளார்.

இத்தகவல் நிலையத்தில் கணனித் தொழிநுட்பம், தகவல் தொழிநுட்பம், உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கல்வி, பரீட்சை தகவல்கள் தொழிற்பயிற்சி வழிகாட்டல், ஆலோசனை,இளைஞர் வழிகாட்டல் என்பன இருக்கும். இவை மேலே சொல்லப்பட்ட துறைகளில் இளைஞர்களுக்குக் கல்வி வாய்ப்பு வழங்கவும் பயன்படும் முதலாவது இளைஞர் தகவல் நிலையம் அண்மையில் மஹரகமவிலுள்ள தேசிய இளைஞர் நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 26 நிலையங்களும் இவ்வருட முடிவிற்குள் பூர்த்தி செய்யப்பட்டு திறக்கப்படும். இதனால் லட்சக்கணக்கான இளைஞர்கள் பயன்பெறுவரென கூறப்படுகின்றது.

# பால்மா விலையேற்றம்; சராசரி வருமானமுள்ளவர்கள் பாதிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

பால்மா வகைகளின் விலையேற்றத்தால் சராசரி வருமானமுள்ள லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

வானொலியில் விலையேற்றம் பற்றிக்கூறி மறுகனம் பெறும்பாலான கடைகளில் பழைய இரும்புக்கு புதியவிலைப்படி விற்றதைக் கான முடிந்தது.

சில பால்மா வகைக்கு (அங்கர்,நெஸ்பிறே) தட்டுப்பாடு நிலவுகின்றது. மேலும் விலையேறலாம் என்று கூறி சிலர் பதுக்கிவைத்துள்ளதாகவும் தெரிகிறது.

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து பால்மா விலையேற்றம் மக்களின் வாழ்க்கைச்சுமையை மேலும் பலமடங்கு கூட்டியுள்ளது எனக் கூறலாம். இதேவேளை தனியார் கம்பனியாக்கப்பட்ட சதோச நிறுவனக் கிளைகளில் எதிர்வரும் 17ம் திகதி வரை சலுகைவிலைகளில் பொருட்கள் (சதோச வாசி) விற்கப்படும் என்று விபரமடங்கிய பிரசுரங்களும் வெளியாகியிருந்தன.

ஆனால்,அப்பொருட்களில் 60 வீதம் அங்கு இல்லை. இன்று வரும் நாளை வரும் என்று கூறுகிறார்கள்.

# சர்வோதய அமைப்பு சமாதன பிரகடனம்

(பாண்டிருப்பு நிருபர்)

உலக சமாதானத்தை முன்னிட்டு சர்வோதய அமைப்பு எதிர்வரும் 21ம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாடெங்கிலும் இருந்து 5 லட்சம் மக்களை ஒன்று திரட்டி சமாதானதியான பிரகடனம் ஒன்றைச் செய்யவுள்ளனர். இதற்கான செயற்பாடுகளை சர்வதேச அமைப்பு ஐக்கிய நாடுகள் சபை முதன் முக்கியஸ்தர்களுடனும், அரசாங்கத்தின் அமைப்புடனும் மேற்கொண்டுள்ளது. கல்முனையிலிருந்து சுமார் 750 சர்வதேச சிரமதான சங்க உறுப்பினர்களும், பொது மக்களும் கலந்து கொள்ள விரும்புவதாக கல்முனைப் பிரதேச சர்வோதய இணைப்பாளர் என்.செளவியதாசன் தெரிவித்தார்.

*மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் அண்மையில் மட்.கத்தோலிக்க மண்டபத்தில் தலைவர் எந்திரி என்.வி.ரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர், இணைப்பாளர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக மட்.கெயார் நிறுவனப் பணிப்பாளர். திரு பி.ஜெகநாதன் கலந்து சிறப்பித்து உரை நிகழ்த்துவதை படத்தில் காணலாம்.*



# பொதுக்கூட்டம்

(எம்யுவராஜ்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு சித்த ஆயுள் வேத வைத்திய பாதுகாப்பு சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக கதிர்காமநாதன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச மட்டத்தில் இயங்கிவரும் மேற்படி சபையை விரிவு படுத்த மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபை அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 2004,2005ம் ஆண்டுக்கான நிருவாகிகள் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவர் மூலிகை வேந்தர், கலைவாணன், செயலாளர் எஸ்.சுதர்சன், பொருளாளர் திருமதி ம.தர்மலிங்கம், உபதலைவர்கள் என்.முகைதீன் பாவா, திருமதி எஸ். சண்முகம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஐந்து பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பசிமுக பகுத்தறிவு இயக்கம் இவ்வாண்டு பரிசுப்போட்டி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு ''பசிமுகப் பகுத்தறிவு இயக்கம்'' வெற்றிவேல் வினாயகமூர்த்தியைத் தலைவராகக் கொண்டு பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவரும் ஆக்கங்களிலிருந்து தங்கள் கொள்கைக்கேற்ப தெரிவு செய்யப்படும் கவிதை, கதை, கட்டுரைகளுக்குப் பரிசு கொடுத்தும் வருகின்றது. இந்த வகையில் இவ்வாண்டும் அண்ணா செல்வா நினைவாக பரிசில் வழங்க இவ்வமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே எழுத்தாளர்கள் கவிஞர்கள் தங்களது சிறந்த படைப்புக்களில் இரண்டு பிரதிகளை பசிமுகம், அருட்சிவ அகம் 193.9ய, எல்லை வீதி மட்டக்களப்பு எனும் விலாசத்திற்கு உடனடியாக அனுப்புமாறு பசிமுக பகுத்தறிவு இயக்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(எம்.யுவராஜ்)

கிழக்கு மாகாண சித்த வைத்தியர் சங்கம் மட்டக்களப்பு மாவட்ட ஆயுர் வேத வைத்தியசாலைகளில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு மட்டக்களப்பு அரசடி மகாஜனக் கல்லூரியில் கிழக்கு மாகாண சித்த வைத்தியர் சங்கத் தலைவர் வை.க வினாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் பிரதம விருந்தினராக மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் திருமதி.இ.தர்மராஜா, கெளரவ விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. க.தங்கேஸ்வரி, சிறப்பு விருந்தினர்களாக மட்.மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம்,மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க.கதிர்காமநாதன், மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வில்லியம்ஸ், மட். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு
Eezhanatham

## மட்.வைத்தியர் போராட்டம் கை விடப்பட்டது

(நமது நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை. வைத்தியர்கள் நேற்று முதல் நடாத்தவிருந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று இவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவிருந்த போதும் இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி நேற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து போராட்டத்தை கைவிட்டனர்.

# பத்மநாதன் எம்.பி. சாகாமம் விஜயம்

(சுவேந்திரா)

சாகாமம் பிரதேசத்துக்கான குடிநீர், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்த்து வைப்பதன் நோக்காக சாகாமம் பிரதேசத்திற்கு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் சமூகமளிக்கவுள்ளார்.

குடிநீர், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடனும் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒருதொகையையும் பயன்படுத்தி சில உதவிகளைச் செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தீர்மானித்துள்ளார்.

**சிறப்புத் ....**

வைத்தனர்.

வன்னியில் விசேட கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

**ஓட்டமாவடியில்...**

ஹோட்டல் ஒன்றை இலக்கு வைத்து கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.ஜி.தர்மவத்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

**நாளை...**

இடம்பெறவுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்த 158பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்தினத்தினை போராட்டக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிர்நீத்த பொதுமக்களின் ஆத்ம சாந்தி வேண்டி இந்த நாள் துக்க நாளாக அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**மீண்டும்...**

க்கட்சித் தலைவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிக்கத் தீர்மானிக்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் மிகத் தெளிவாக உள்ளனர் என்றும் சிறிலங்காவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பெரியசாமி சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

**வைகோ...**

தமிழக அரசுக்கு வைகோ மீதான வழக்கை விலக்கிக் கொள்ளுமாறு கோரியிருந்தது.

இதற்கமைய வழக்கை விலக்கிக் கொள்ளுமாறு தமிழக அரசு செய்த வழக்கைத் நேற்று பூந்தமல்லி உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக பலர் சாட்சியமளித்தும் ஆதாரங்களை மன்றில் சமர்ப்பித்திருப்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய முடியாது எனவும் எனினும் வைகோ மீதான விசாரணைக்கு இடைக்கால தடை உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதால் தற்போது விசாரணை மேற்கொள்ள முடியாது எனவும் நீதிமன்றம் தெரிவித்தது.

**நோர்வே...**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் விடுத்த அறிக்கையில மேலும் தெரிவித்துள்ளதாவது.

மதகுருவானவர்கள் மக்களை வழி நடத்துபவனாகவும், வழிகாட்டியாகவும் செயல்பட வேண்டும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ், சிங்கள மக்களை மோத விட்டு வேடிக்கை பார்க்கும் பேரினவாத மதகுருமார்கள் இருக்கும் வரை சாந்தியும் சமாதானமும் ஒரு காலமும் இலங்கைத் திருநாட்டில் இருக்காது.

நோர்வே அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவிகளை வழங்குவதாக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் குற்றம் சாட்டியுள்ளமை சர்வதேச அரங்கில் சிறிலங்காவின் இனவாத முகமூடியை உணர்ந்து கொள்ள முடியும்.

ஜே.வி.பியும், ஹெல உறுமயவும், சமாதானத்தை குழிதோண்டிப் புதைத்து சண்டையை வலிந்து இழுப்பதற்கான பிரயத்தனத்தில் அல்லும் பகலும் உழைப்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**அம்பிளாந்துறை...**

ப்பதுடன் சிலரது அடையாள அட்டை இலக்கங்களை பதிவு செய்வதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

# தொங்கும் ஆளும் தரப்புக்கு முட்டு கொடுக்க ஆறுமுகம் அணி தீர்மானம்

(நமது நிருபர்)

**சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்காகவும், அபிவிருத்திப் பணிகளை தடை யின்றி மேற்கொள்வதற்காகவும் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப் பினருமான ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனை தெரிவித்தார். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடந்த பல மாத காலமாக தாங்கள் அவதானித்து வந்ததாகவும், அரசாங்கம் இழுபறி நிலையில் இருந்ததாகவும், அதன் பின்னரே இந்த தீர்மானத்தை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதரவு வழங்குவது தொடர்பாக தங்கள் கட்சி எந்தவித நிபந்தனைகளையும் அரசாங்கத்திற்கு விதிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார். தங்களது ஆதரவு தேவையா? இல்லையா? என்ற தீர்மானத்தை அரசாங்கமே எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகார சபையை அடிப்படையாகக் கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தற்போதைய நிலமையில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தங்களது ஆதரவின் மூலம் அரசாங்கத்திற்கு அபிவிருத்திப் பணிகளையும் சமாதான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து செல்ல முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரசில் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதக்குழுக்களின் ஆயுதக்களைவில் அரசு அசமந்தத்தனமான போக்கு

## மேற்குலக இராஜதந்திர வட்டாரம் கரிசனை

(நமது நிருபர்)

இலங்கைத்தீவின் இரு தரப்பிற்குமிடையேயான அமைதியைப் பேணுவதற்கு ஏதுவாயுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள ஒரு சரத்தை அரசு இதுவரை நிறைவேற்றாது உள்ளவிடயம் மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களின் கரிசனைக்குத் தற்போது உள்ளாகியுள்ளது.

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 1.8ன் பிரகாரம் வட கிழக்குப் பகுதிகளில் அரசுடன் இணைந்து செயற்பட்டு வரும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 30 நாட்களிற்குள் களையப்படுவதோடு, அக் குழுக்களின் உறுப்பினர்கள் அரச படைகளில் இணைக்கப்பட்டு அவர்கள் வட-கிழக்கு மாகாணங்களிற்கு வெளியேயே செயற்பட அனுமதிக்கப்படுவார்கள் என்பது எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் சிறிலங்கா அரசு இவ் விவகாரத்தில் இதுவரை காலமும் சிரத்தை காட்டாத நிலையே இன்றைய நிலைக்கான காரணம் என்பதை சமாதான நகர்வுகளில் அக்கறையுள்ள மேற்குலக வட்டாரங்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவரும் அதேவேளை சிறிலங்காவிற்கான நிதிவழங்கும் செயற்பாடுகளுக்கான ஒரு நிபந்தனையாக இந்த விவகாரத்தை முன்னிறுத்தும் செயற்பாட்டில் அவை ஈடுபடும் என்றும் தெரியவருகின்றது.

கிழக்கு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில், இராணுவ முகாம்களிற்கும் காவலரன்களிற்கும் நெருங்கிய இடங்களிலும் வைத்து புலிகள் தாக்கப்பட்டதையடுத்து அவர்கள் தங்களின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதி கோரிய போதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காரணங்காட்டி அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது அதேவேளை அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பி. தீவகம் மற்றும் இதர பிராந்தியங்களில் அரசபடை முகாம்களையும் அதன் சுற்றாடலையும் தமது செயற்பாட்டிடமாக மாற்றி இன்னமும் செயற்பட்டுவருவது ஒப்பந்த சரத்தை மீறி இன்றும் தொடர்ந்து வருவது போன்றவையே அவர்களின் கரிசனையைப் பெற்றுள்ளன.

இதேவேளை கொழும்பில் வழமைக்கு மாறாக கடந்த இரு வாரங்களிற்குள் இடம்பெற்ற சம்பவமொன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. சமாதான சூழ்நிலை தொடர்ந்து நிலவ வேண்டும் என்பதில் அக்கறையுள்ள சில சிங்களப் புத்திஜீவிகள் மற்றும் வியாபார முக்கியஸ்தர்கள் சில தகவல்களை சமாதானப் பேச்சில் அக்கறையுள்ளவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். கிழக்கு மற்றும் கொழும்புப் பிரதேசங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் காரணமாக 'சமாதானச் சூழ்நிலை இல்லாது போகலாம்' என்ற ஐயத்தால், கொழும்பு பங்குச்சந்தையின் விலை நிர்ணயம் மற்றும் செயற்பாடுகள் என்பன பெரும் தளம்பலையடைந்தன. இதனையடுத்தே இவ்விவகாரம் மேற்குலகின் கவனத்திற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மேற்படி சிலரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இதேவேளை நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதுக்குழுவைச் சந்தித்த அரசியல் ஆலோசகரும் மதியுரைஞருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களும், சந்திரிகாவின் அரசு ஆட்சிக்கு வந்த நாள் முதல் சமாதானத்தைச் சீர்குலைக்கும் வேலைகளை மும்முரமாகச் செய்துவருகின்றது என்ற விடயத்தையும் கிழக்கில் இராணுவ முகாம்களிலிருந்து செயற்படும் ஆயுதக் குழுக்களை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக சிறிலங்கா அரசு அங்கிருந்து அகற்றினால் சகல சிக்கல்களும் முடிவுக்கு வந்துவிடுமெனத் தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.கிழக்கு மாகாணத்தில் தேவையற்ற அசம்பாவிதங்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவு தோற்றுவித்த போது சந்திரிகா சார்புப் பிரதிநிதிகளாக அரசோடு சேர்ந்தியங்கும் தமிழ் ஆயுதக் குழுவே நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தது என்பதும், அக்குழுவின் தலைவரே அதனை சர்வதேச வானொலியொன்றின் தமிழ்ச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இந்தத் அரசஆதரவு ஆயுதக்குழு இன்னமும் இராணுவம் மற்றும் கடற்படையுடன் சேர்ந்து தமிழர் பகுதிகளில் இயங்கி வருகின்றது என்பதும் இவர்களே சமாதானத்திற்கு எதிரான செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றார்கள் என்ற விவகாரமும் சிறிலங்கா அரசிற்கான அழுத்தமாகப் பிரயோகிக்கப்படும் சாத்தியம் உள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

**எலும்பு...**

க்கிழமை பகல் 12.30 மணிக்கு மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எம். தேவ ராசன் இதனைத் திறந்து வைத்தார்.

இதேவேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எலும்பு முறிவு சிகிச்சை நிபுணராக டாக்டர் சொர்ணகுமார் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதுவரை காலமும் கிழக்கு மாகாணத்தில் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் இல்லாமை குறிப்பிடத்தக்கது.

**மட்டு.அம்பாறை மாவட்ட கல்விப் பிரிவின் வேண்டுகோள்**

**மட்டு.அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலை**

**அதிபர்களின் கவனத்திற்கு**

**தங்களது பாடசாலைகளில் குடிநீர், மலசல கூடம், சுற்றுவேலி போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாத பாடசாலைகள் தமது தேவைகளை விண்ணப்பங்கள் மூலம் கீழ் குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

**மேற்குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**பொறுப்பாளர்**
**கல்விப் பிரிவுச் செயலகம்,**
**அரசியல்துறை,**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 04-09-2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது